RNI-NO: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி

MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

www.malaithanthi.in

DAILY EVENING

மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-5 | இதழ்- 253 | செப்டம்பர் 17, 2026 வியாழக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5

# இந்தியா உடனான தடையற்ற வர்த்தக ஒப்பந்தத்துக்கு நியூசிலாந்து நாடாளுமன்றம் ஒப்புதல்

வெல்லிங்டன்: செப்.17–

இந்தியா உடனான தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் நியூசிலாந்து நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது. ஆதரவாக 93 உறுப்பினர்களும், எதிராக 29 உறுப்பினர்களும் வாக்களித்தனர்.

இந்தியா உடனான தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் குறித்த வாக்கெடுப்பு நியூசிலாந்து நாடாளுமன்றத்தில் இன்று (புதன்கிழமை) நடைபெற்றது. இதில், ஒப்பந்தத்துக்கு ஆதரவாக 93 உறுப்பினர்கள் வாக்களித்தனர். எதிராக 29 உறுப்பினர்கள் வாக்களித்தனர். இதன்மூலம், பெரும்பான்மை உறுப்பினர்களின் ஆதரவை இந்த ஒப்பந்தம் பெற்றுள்ளது. ஆளும் தேசிய கட்சி மட்டுமின்றி, எதிர்க்கட்சியான தொழிலாளர் கட்சியும் இந்த ஒப்பந்தத்துக்கு ஆதரவாக வாக்களித்துள்ளது.

இந்தியா உடனான தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டதை அடுத்து நியூசிலாந்து பிரதமர் கிறிஸ்டோபர் லக்சன் வெளியிட்டுள்ள எக்ஸ் சமூக ஊடகப் பதிவில், "இந்தியா உடனான தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் சாத்தியமற்றது என பலர் என்னிடம் சொன்னார்கள்.

ஆனால், இன்று அந்த ஒப்பந்தம் நாடாளுமன்றத்தில் நடைபெற்ற வாக்கெடுப்பில் நிறைவேற்றப்பட்டுள்ளது. இதன்மூலம், இந்த ஒப்பந்தம் நடைமுறைக்கு வருகிறது. எங்கள் முதல் பதவிக்காலத்திலேயே இந்தியாவுடன் தடையற்ற



வர்த்தக ஒப்பந்தத்தை ஏற்படுத்துவோம் என்று நாங்கள் உறுதி அளித்திருந்தோம். அந்த வாக்குறுதியை நிறைவேற்றி உள்ளோம்.

இந்த முக்கியத்துவம் வாய்ந்த ஒப்பந்தம் நியூசிலாந்து மக்களுக்கு அதிக வேலைவாய்ப்புகளையும் வருமானத்தையும் பெற்றுத் தரும். இந்த ஒப்பந்தத்தின் மூலம் 140 கோடி நுகர்வோர்களைக் கொண்ட இந்திய சந்தை நியூசிலாந்துக்காக திறக்கிறது.

நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும், மக்களின் முன்னேற்றத்துக்கு உதவுவதற்குமான வழிகளில் இதுவும் ஒன்று. அடிப்படை விஷயங்களைச் சரி செய்து எதிர்காலத்தைக் கட்டமைப்போம்." என்று தெரிவித்துள்ளார்.

இந்தியாநியூசிலாந்து ஆகிய இரு நாடுகளுக்கும் இடையிலான பொருட்கள் மற்றும் சேவைகளின் இருதரப்பு வர்த்தகத்தை அதிகரிப்பதுடன், முதலீடுகளை ஊக்குவிக்கும் நோக்கில் கடந்த ஏப். 27-ம் தேதி தடையற்ற வர்த்தக ஒப்பந்தத்தில் இரு நாடுகளும் கையெழுத்திட்டன.

இந்த ஒப்பந்தத்தின் மூலம், இந்தியாவில் இருந்து நியூசிலாந்துக்கு ஏற்றுமதி செய்யப்படும் 100% பொருட்களுக்கும் வரியில்லா சந்தை அணுகல் கிடைக்கும். இரு நாடுகளும் பரஸ்பரம் ஒப்புக்கொள்ளும் தேதியில் அடுத்த மாதம் இந்த ஒப்பந்தம் அமல்படுத்தப்படும் என்று வர்த்தகத்துறை அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதற்கு முன்பு, மட்பாண்டப் பொருட்கள், தரைவிரிப்புகள், வாகனங்கள் மற்றும் வாகன உதிரிபாகங்கள் உள்ளிட்ட இந்தியாவின் முக்கிய ஏற்றுமதிப் பொருட்களுக்கு நியூசிலாந்து 10% வரை இறக்குமதி வரி விதித்து வந்தது. மேலும், அடுத்த 15 ஆண்டுகளில் இந்தியாவில் 20 பில்லியன் டாலர் முதலீடு செய்ய நியூசிலாந்து உறுதியளித்துள்ளது.

# அருப்புக்கோட்டை விநாயகர் ஊர்வலத்தில் தகராறு: கடும் நடவடிக்கைக்கு இந்து முன்னணி வலியுறுத்தல்

சென்னை: செப்.17–

அருப்புக்கோட்டையில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற விநாயகர் விசர்ஜன ஊர்வலத்துக்குள் புகுந்து தகராறில் ஈடுபட்டு கொலை மிரட்டல் விடுத்த இஸ்லாமிய அமைப்பினர் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தமிழக அரசை, இந்து முன்னணி வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பாக இந்து முன்னணி மாநில தலைவர் காடேஸ்வரா சி.சுப்பிரமணியம் வெளியிட்டுள்ள அறிக்கையில், "விருதுநகர் மாவட்டம் அருப்புக்கோட்டையில் 15.09.2026 அன்று மாலை இந்து முன்னணி சார்பில் விநாயகர் விசர்ஜன ஊர்வலம் நடைபெற்றது. வழக்கம்போல மசூதி அருகில் மேளம் அடிக்கக் கூடாது என்ற காவல்துறையின் நிபந்தனை ஏற்கப்பட்டு அவர்களுக்கு ஒத்துழைப்பு வழங்கப்பட்டது. விநாயகர் ஊர்வலத்தில் ஓம் கணேசா... ஜெய் கணேசா... பாரத் மாதா கி ஜே... போன்ற கோஷங்களோடு ஊர்வலம் சென்றது.

அப்போது இஸ்லாமிய அமைப்பைச் சார்ந்த ஐந்து




பேர் திடீரென்று விநாயகர் ஊர்வலத்துக்குள் அத்துமீறி நுழைந்து, விநாயகர் சதுர்த்தி விழா நிர்வாகிகளை அடிக்கப் பாய்ந்து தகராறு செய்தனர். மேலும், ஊர்வலத்தில் வந்த விநாயகர் கமிட்டி பொறுப்பாளர் சிவசாமி என்பவரை பார்த்து உன்னை வெட்டி கொன்று விடுவேன் என பகிரங்கமாக கொலை மிரட்டல் விடுத்தனர். அங்கு பாதுகாப்பு பணியில் இருந்த காவல்துறையினர் அவர்களை கைது செய்வதற்கு பதில் அவர்களை சமாதானப்படுத்தி கலைந்து செல்ல கெஞ்சினர்.

விநாயகர் விசர்ஜன ஊர்வலத்தின் உள்ளே புகுந்த இஸ்லாமிய அமைப்பைச் சார்ந்தவர்கள், மதமோதலை உருவாக்கும் வகையிலும், மத கலவரத்தை ஏற்படுத்தும் வகையிலும் செயல்பட்டுள்ளனர்.

காவல்துறை முன்னிலையிலேயே இத்தகைய சம்பவம் அரங்கேறியுள்ள நிலையில், அவர்களை காவல்துறை கைது செய்யாதது ஆச்சரியமாகவும் அதிர்ச்சியாகவும் உள்ளது.

ஒட்டுமொத்த நிகழ்வும் வீடியோ காட்சியாக சமூக வலைதளங்களில் வெளிவந்தும் தமிழக காவல்துறை அமைதி காக்கிறது.

அருப்புக்கோட்டையில் நடைபெற்ற இந்த சம்பவத்தை இந்து முன்னணி பேரியக்கம் வன்மையாக கண்டிக்கிறது. இதேநிலை தொடர்ந்தால் இஸ்லாமிய பயங்கரவாதம் மீண்டும் தலைதூக்கும் அபாயம் உருவாகும் என்று எச்சரிக்கிறோம்.

இது குறித்து தேசிய புலனாய்வு முகமை மற்றும் மாநில உளவுத்துறை முழுமையான விசாரணை நடத்தி சதிகளை முறியடிக்க முனைப்புடன் செயல்பட வேண்டும்.

தமிழக அரசும், காவல்துறை உயர்அதிகாரிகளும் இதில் தலையிட்டு பிரச்சினை ஏற்படுத்திய இஸ்லாமிய அடிப்படைவாதிகள் மீது சட்டப்படி கடும் நடவடிக்கை எடுத்து கைது செய்ய வேண்டும்.

தமிழகத்தில் நடக்க இருக்கிற விநாயகர் விசர்ஜன ஊர்வலத்திற்கு தக்க பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்து தர காவல்துறையை தனது கட்டுப்பாட்டில் வைத்துள்ள தமிழக முதல்வர் தனி கவனம் செலுத்த வேண்டும்." என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# செப்.25ல் தாய்மாமன் தங்க மோதிரம் திட்டம் துவக்கம்

சென்னை: செப்.17–

தாய்மாமன் தங்க மோதிரம் திட்டத்தை செப்.25ம் தேதி மதுரையில் முதல்வர் விஜய் தொடங்கி வைக்கிறார்.

அரசு மருத்துவ மனைகளில் பிறக்கும் குழந்தைகளுக்கு ஒரு கிராம் தங்க மோதிரம் அணிவிக்கும் திட்டமான தாய்மாமன் தங்க மோதிரம் திட்டம் முன்னாள் முதல்வர் அண்ணாதுரை பிறந்த நாளான செப்.15ல் தொடங்கி வைப்பதாக இருந்தது. இந்த திட்டத்தை செயல்படுத்த ரூ.755.83 கோடி நிதியும் ஒதுக்கீடு செய்யப்படுவதாக அறிவிக்கப்பட்டு இருந்தது.

ஆனால் முதல்வர் விஜய் லண்டன் பயணம்




காரணமாக இந்த திட்டம் தொடங்கப்படுவது தள்ளி போனது. எப்போது திட்டத்தை தொடங்குவது என்ற அறிவிப்பும் விரைவில் வெளியிடப்படும் என்று தெரிவிக்கப்பட்டு இருந்தது.

இந் நிலையில், தாய்மாமன் தங்க மோதிரம் திட்டத்தை செப். 25ம் தேதி மதுரையில் முதல்வர் விஜய் தொடங்கி வைக்கிறார். இதற்கான அதிகாரப்பூர்வ அறிவிப்பு வெளியாகி இருக்கிறது. இதே போன்று செப்.22ம் தேதி காமராஜர் காலை உணவு திட்டத்தை முதல்வர் விஜய் திருவான்மியூரில் தொடங்கி வைக்க உள்ளார்.

அதே நேரத்தில் தேர்தல் நடத்தை விதிகள் அமலில் உள்ளதால், மதுராந்தகம், தாராபுரம் தொகுதிகளை உள்ளடக்கிய செங்கல்பட்டு, திருப்பூர் மாவட்டங்களில் இந்த திட்டம் செயல்பாட்டுக்கு வராது.

# "மதுரை மீனாட்சி அம்மன் கோயில் குடமுழுக்கு விழாவில் அரசியல் தலையீடு இல்லை"

## அமைச்சர் நிர்மல் குமார்

மதுரை: செப்.17–

மதுரை மீனாட்சி அம்மன் கோயில் குடமுழுக்கு விழாவில் அரசியல் தலையீடு இல்லை என தமிழக சட்டத்துறை அமைச்சர் நிர்மல் குமார் தெரிவித்துள்ளார்.

மதுரை மீனாட்சி அம்மன் கோயில் குடமுழுக்கு விழா 17 ஆண்டுகளுக்குப் பின்பு நேற்று (செப்.17) காலை 7.40 முதல் 8.10 மணியளவில் நடைபெறுகிறது. இதனையொட்டி அமைச்சர்கள் நிர்மல் குமார், ரமேஷ் இன்று மதுரையில் ஆய்வு மேற்கொண்டனர். பின்னர் அவர்கள் செய்தியாளர்களை சந்தித்தனர்.

அப்போது 'பாஸ்' சர்ச்சை தொடர்பாக கேள்வி எழுப்பப்பட்டது. அதற்கு அமைச்சர் நிர்மல் குமார் பதிலளிக்கையில், "மதுரை மீனாட்சி அம்மன் கோயில் குடமுழுக்கு ஏற்பாடு பணிகள் 100% நிறைவடைந்தது. காவல், சுகாதார துறையினர் இரண்டு ஷிப்டுகளில் பணி செய்கின்றனர். மின் தடை ஏற்படாமல் இருப்பதற்கான ஏற்பாடுகள்



செய்யப்பட்டுள்ளன.

கோயில் மேல் தளத்தில் எத்தனை பேரை அனுமதிப்பது என்பது தொடர்பாக இதுவரை முடிவெடுக்கப்படவில்லை. 9000 பேர் அனுமதிக்க திட்டமிடப்பட்டது. ஆனால், அவர்களை அனுமதிக்க முடியுமா என்பது பற்றி ஆய்வுகள் (ஸ்டெபிலிட்டி செக்) செய்து கொண்டிருக்கிறோம். அதன் பின்னரே இறுதி முடிவு எட்டுவோம். பாஸ் விஷயத்தில் நாங்கள் எந்தத் தலையீடும் செய்யவில்லை. அவற்றை கண்ணில் கூட பார்க்கவில்லை.

பொது மக்களுக்கு குலுக்கல் முறையில் 2000 பாஸ் கொடுக்கப்பட்டுள்ளது. அவர்களும் மேலே அனுமதிக்கப்படுவார்கள். தவிர, சித்திரை வீதியில் மக்கள் நின்று தரிசனம் செய்ய அனுமதி இல்லை. இது கோபுரத்துக்கு செல்வோர் வந்து செல்வதற்கான வழி மட்டுமே.

மதுரை மீனாட்சி அம்மன் குடமுழுக்கு பணியில் எந்த அரசியல் தலையீடும் இல்லை. மக்கள் பாதுகாப்பு சார்ந்து மட்டுமே பணியாற்றுகிறோம். அறங்காவலர்கள் குழுவை தொடர்பு கொண்டு அவர்கள் தேவையை பூர்த்தி செய்யச் சொல்கிறேன்." என்றார்.

தொடர்ந்து இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் ரமேஷ் பேசுகையில், "தமிழ் ஓதுவார்கள் யாக பூஜைகள் நடத்த அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன. தமிழுக்கு எப்போதும் முன்னுரிமை உண்டு

அரசால் நியமிக்கப்பட்ட ஓதுவார்கள் யாரும் வருத்தம் தெரிவிக்கவில்லை. கலசத்தில் நீர் ஊற்றவும், கருவறை செல்லவும் தமிழ் ஓதுவார்களுக்கு அனுமதி உண்டு." என்றார்.

# மதுராந்தகம், தாராபுரம் இடைத்தேர்தலுக்கு தடை விதிக்க முடியாது: ஐகோர்ட்

சென்னை: செப்.17–

மதுராந்தகம், தாராபுரம் இடைத்தேர்தலுக்கு தடை விதிக்க முடியாது என சென்னை உயர் நீதிமன்றம் தெரிவித்துள்ளது. மேலும், எம்எல்ஏக்கள் இதுபோன்று குறுகிய காலத்தில் ஒரு தொகுதியில் ராஜினாமா செய்துவிட்டு அதே தொகுதியில் வேறு கட்சிக்காக போட்டியிடுவது மக்களை அவமானப்படுத்தும் செயல். இதைத் தடுக்க தேர்தல் ஆணையம் உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று நீதிபதிகள் அறிவுறுத்தியுள்ளனர்.

கடந்த ஏப்ரல் மாதம் நடந்த தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில், மதுராந்தகம், தாராபுரம், அம்பாசமுத்திரம், பெருந்துறை, கரூர், விராலிமலை தொகுதிகளில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட 6 அதிமுக எம்எல்ஏக்கள், தங்கள் பதவிகளை ராஜினாமா செய்துவிட்டு ஆளுங்கட்சியான தவெகவில் இணைந்தனர்.

இதில் தேர்தல் வழக்கு நிலுவையில் உள்ள, அம்பாசமுத்திரம் பெருந்துறை கரூர் விராலிமலை மற்றும் திருச்சி கிழக்கு தொகுதிகளுக்கு இடைத்தேர்தல் அறிவிக்க உயர் நீதிமன்றம் தலைமை நீதிபதி அமர்வு தடை விதித்துள்ளது.

தேர்தல் வழக்கு நிலுவையில் இல்லாததால், மதுராந்தகம் மற்றும் தாராபுரம் தொகுதிகளுக்கு தேர்தல் ஆணையம் இடைத்தேர்தலை தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

இந்நிலையில், தேர்தல் முடிவுகள் வெளியான குறுகிய காலத்தில், மக்கள் தீர்ப்பை புறக்கணித்து அரசியல் காரணங்களுக்காக எம்எல்ஏ பதவியை ராஜினாமா செய்ததால், இடைத்தேர்தலில் அவர்கள் போட்டியிட வேட்பு மனு தாக்கல் செய்யும்போது, தேர்தல் செலவை டெபாசிட் செய்யும் வகையில் உரிய நடைமுறையை வகுக்கும்படி தேர்தல் ஆணையத்துக்கு உத்தரவிடக்கோரி சென்னை சைதாப்பேட்டையை சேர்ந்த வழக்கறிஞர் சுதன் என்பவர் பொதுநல வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

அந்த மனுவில், "சொந்த அரசியல் காரணங்களுக்காக எம்எல்ஏக்கள் பதவியை ராஜினாமா செய்ததால், பொதுமக்களின் வரிப்பணத்தில் இடைத்தேர்தல் நடத்தப்பட வேண்டி உள்ளது. இந்தச் செலவுகளுக்கு அவர்களை பொறுப்பாக்கும் வகையில் உரிய நடைமுறைகளை வகுக்க வேண்டும்," என்று கூறப்பட்டுள்ளது.

மேலும், தேர்தல் முடிவுகள் வெளியான குறுகிய காலத்தில் அரசியல் காரணங்களுக்காக மக்கள் தீர்ப்பை புறக்கணித்து பதவி விலகுபவர்களை குறிப்பிட்ட காலத்துக்கு தேர்தலில் போட்டியிட தடை விதிக்கும் வகையில் சட்டம் கொண்டு வருவது குறித்து ஆய்வு செய்ய வேண்டும் என்றும் மனுவில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கு முடியும் வரை மதுராந்தகம் மற்றும் தாராபுரம் தொகுதிகளுக்கு இடைத்தேர்தல் நடத்த தடை விதிக்க வேண்டும் என்றும் இந்த தொகுதிகளுக்கு தவெக வேட்பாளர்களாக அறிவிக்கப்பட்டுள்ள முன்னாள் எம்எல்ஏக்கள் மரகதம் குமாரவேல் மற்றும் சத்தியபாமா ஆகியோரின் வேட்பு மனுக்களை ஏற்க தேர்தல் ஆணையத்துக்கு தடை விதிக்க வேண்டும் என்றும் மனுவில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அதேபோல, திருச்சி கிழக்கு, கரூர், விராலிமலை, பெருந்துறை, அம்பாசமுத்திரம், மதுராந்தகம் மற்றும் தாராபுரம் ஆகிய தொகுதிகளுக்கு இடைத்தேர்தல் நடத்த ஆகும் செலவுகளை அறிக்கையாக தாக்கல் செய்ய தேர்தல் ஆணையத்துக்கு உத்தரவிட வேண்டும் என்ற கோரிக்கையும் மனுவில் முன்வைக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கு நீதிபதிகள் எஸ் எம் சுப்பிரமணியம்,கிருஷ்ணசாமி கோவிந்தராஜன் அமர்வு முன்பு விசாரணைக்கு வந்தது.

அப்போது நீதிபதிகள், "மக்கள் நம்பிக்கையின் அடிப்படையில் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். ஆனால் இது போன்ற நடவடிக்கைகள் அதை கேலிக் கூத்தாக்குகிறது. இது வாக்காளர்களை அவமானப்படுத்தும் செயல். குறுகிய காலத்தில் ராஜினாமா செய்துவிட்டு அதே தொகுதியில் மீண்டும் போட்டியிடுகிறார்கள். இது குறித்து தேர்தல் ஆணையம் ஆய்வு செய்ய வேண்டும், இதை தடுக்க இதுவரை எந்த வழிமுறைகளும் இல்லை. சில அசாதாரண சூழ்நிலைகளில் தேர்தல் ஆணையம் முடிவெடுக்க வேண்டும் என அறிவுறுத்திய நீதிபதிகள், தேர்தலுக்கு இடைக்கால தடை விதிக்க முடியாது என்றனர்.

மேலும், ஏற்கெனவே இதுபோல வழக்குகள் தலைமை நீதிபதி அமர்வு முன்பு நிலுவையில் இருப்பதால் அந்த வழக்குகளோடு இந்த வழக்கையும் சேர்த்து விசாரிக்க மாற்றி உத்தரவிட்டுள்ளனர்.

# புதிய ரேஷன் கார்டு விண்ணப்பங்களை விரைந்து பரிசீலிக்க கோரிக்கை

நீலகிரி, செப்.17-

புதிய குடும்ப அட்டை (ரேஷன் கார்டு) கோரி இணையவழியில் விண்ணப்பித்து 4 மாதங்களுக்கும் மேலாக காத்திருக்கும் பொதுமக்களின் விண்ணப்பங்களை விரைந்து பரிசீலித்து, தகுதியானவர்களுக்கு உடனடியாக குடும்ப அட்டை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என கூடலூர் நுகர்வோர் மனிதவள சுற்றுச்சூழல் பாதுகாப்பு மையம் கோரிக்கை விடுத்துள்ளது.

இதுகுறித்து கூடலூர் நுகர்வோர் மனிதவள சுற்றுச்சூழல் பாதுகாப்பு மையம் மையத்தின் பொதுச்செயலாளர் சு. சிவசுப்பிரமணியம், தமிழக முதலமைச்சர் மற்றும் கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை அமைச்சருக்கு அனுப்பியுள்ள மனுவில் கூறியிருப்பதாவது:

புதிதாக திருமணமாகி தனிக்குடும்பமாக வசிப்பவர்கள், கூட்டுக்குடும்பத்தில் இருந்து பிரிந்து தனியாக வசிப்பவர்கள், குடியிருப்பு மாற்றம் செய்தவர்கள் உள்ளிட்ட பலர் புதிய குடும்ப அட்டை கேட்டு இணையவழியில் விண்ணப்பித்துள்ளனர். ஆனால், பல விண்ணப்பங்கள் நீண்ட நாட்களாக நிலுவையில் உள்ளதாக பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

குடும்ப அட்டை இல்லாததால் நியாயவிலைக் கடைகளில் அத்தியாவசியப் பொருட்களை பெறுவதிலும், குடும்ப அட்டையை அடிப்படையாகக் கொண்ட பல்வேறு அரசு நலத்திட்டங்களைப் பெறுவதிலும் பொதுமக்கள் சிரமத்தை சந்தித்து வருகின்றனர்.

ஏற்கனவே ரேஷன்கார்டுகள் விண்ணப்பித்தால் சம்பந்தபட்ட வட்ட வழங்கல் அலுவலர் கவனத்திற்கு வரும் உடனடியாக தள தணிக்கை செய்து அறிக்கை தருவார்கள். தற்போது சென்னையில் இருந்து பரிந்துரை செய்தால் மட்டுமே வட்ட வழங்கல் அலுவலர்கள் தணிக்கை செய்யமுடியும் என்கிற நிலையால் வட்ட வழங்கல் அலுவலர் மாவட்ட வழங்கல் அலுவலர்கள் விண்ணப்பங்கள் குறித்து விசாரணை மேற்கொள்ள இயலாத நிலை உள்ளதால் விண்ணப்பங்கள் மீது நடவடிக்கை தாமதம் ஆகிறது.

எனவே, நீண்ட நாட்களாக நிலுவையில் உள்ள விண்ணப்பங்களை சிறப்பு முறையில் பரிசீலித்து, தகுதியானவர்களின் வீடுகளில் விரைந்து கள ஆய்வு மேற்கொள்ள வேண்டும். மாவட்ட மற்றும் வட்ட அளவில் தேவையான அதிகாரம் வழங்கி, தேவையற்ற நிர்வாக காலதாமதத்தை தவிர்க்க வேண்டும்.

மேலும், நிலுவையில் உள்ள விண்ணப்பங்களுக்காக சிறப்பு கள ஆய்வு முகாம்கள் நடத்தி, தகுதியான குடும்பங்களுக்கு விரைவாக குடும்ப அட்டை வழங்க வேண்டும். விண்ணப்பத்தின் நிலை, ஆய்வு நிலை மற்றும் நிராகரிப்புக்கான காரணம் ஆகியவற்றை விண்ணப்பதாரர்கள் எளிதில் அறியும் வகையில் வெளிப்படையான தகவல் வசதி ஏற்படுத்த வேண்டும்.

நீலகிரி போன்ற மலை மற்றும் தொலைதூரப் பகுதிகளில் வசிக்கும் பொதுமக்களின் சிரமத்தை கருத்தில் கொண்டு குடும்ப அட்டை வழங்கும் பணிக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும் என்றும் சு. சிவசுப்பிரமணியம் தனது மனுவில் கூறியுள்ளார்.



# குன்னூரில் பேரறிஞர் அண்ணா 118 வது பிறந்தநாள் விழா நிகழ்ச்சி

நீலகிரி, செப்.17-

நீலகிரி மாவட்டம் குன்னூர் நகர திமுக சார்பில் கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் பா.மு. முபாரக தலைமையில் , கொடியேற்றியும் இனிப்புகள் வழங்கியும் சிறப்பாக கொண்டாடப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் மாநில சிறுபான்மை பிரிவு துணைச் செயலாளர் இரா. அன்வர் கான் பொதுக்குழு உறுப்பினர்கள் சதக்கத்துல்லா, செல்வம் ஆகியோர் முன்னிலை வகித்தனர் .மேலும் இந்த நிகழ்ச்சியில் நகரஅவை தலைவர் தாஸ்,துணைச் செயலாளர் சாந்தா சந்திரன்,நகர கழக பொருளாளர் ஜெகநாத் ராவ், மாவட்ட பிரதிநிதி மணிகண்டன், , எம் ஏ .ரகீம்,அணிகளின் நிர்வாகிகள் ஜாகிர் உசேன், பத்மநாபன், சிக்கந்தர் ,சந்திப், நடனம் , அல்போன்ஸ் மணி,சிவசித்திரப்பிரியா,கிளைக் கழக நிர்வாகிகள் சாதிக் பாட்சா ,ctn,பாருக், துரை ,முருகதாஸ், குமரேசன், நாகராஜ், அப்துல் காதர், சமீனா, உமா, ரவி, பழத்தோட்டம் ராமசாமி,ஆனந்தராஜ், முருகதாஸ், சகாயநாதன் செல்வராஜ், மகாலிங்கம் ,சேகர் மற்றும் ஏராளமான கழக நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர் .



## ம.தி.மு.க., அலுவலகத்தை உடைத்து திருட்டு

# கடையநல்லூர் தொகுதி எம்.எல்.ஏ. மீது போலீஸில் புகார்

தென்காசி, செப்.17-

தென்காசி மாவட்ட மதிமுக அலுவலக பூட்டை உடைத்து பொருட்களைத் திருடியதாக, கடையநல்லூர் எம்எல்ஏ தி.மு.ராசேந்திரன் மீது புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழக சட்டப்பேரவைக்கு கடந்த மே மாதம் நடைபெற்ற தேர்தலில், கடையநல்லூர் தொகுதியில் மதிமுகவைச் சேர்ந்த தி.மு.ராசேந்திரன், உதயசூரியன் சின்னத்தில் போட்டியிட்டு வெற்றிபெற்றார்.

தேர்தலுக்குப் பிறகு திமுக கூட்டணியில் இருந்து மதிமுக வெளியேறியதுடன், தவெகவுக்கு ஆதரவளித்தது. ஆனால், கட்சித் தலைமையின் உத்தரவை ஏற்க மறுத்த தி.மு.ராசேந்திரன், தனது எம்எல்ஏ பதவியை ராஜினாமா செய்ய மறுத்து, பதவியில் நீடிக்கிறார். இதனால், அவர் கட்சியில் இருந்து நீக்கப்பட்டார்.தென்காசி அருகே குத்துக்கல்வலசையில் மதிமுக மாவட்ட அலுவலகம் செயல்பட்டு வருகிறது. இங்கு அத்துமீறி நுழைந்து கட்சிக்கு சொந்தமான பொருட்கள் திருடிச் செல்லப்பட்டதாகவும், இது தொடர்பாக கடையநல்லூர் சட்டப்பேரவைஉறுப்பினர் தி.மு.ராசேந்திரன் மீது நடவடிக்கை எடுக்க வலியுறுத்தியும், மதிமுக தென்காசி மாவட்டப் பொருளாளர் அ.சுப்பையா, மாவட்ட காவல் கண்காணிப்பாளருக்கு ஆன்லைன் மூலம் புகார் மனு அனுப்பி உள்ளார்.

அந்த மனுவில் கடந்த 13-ம் தேதி அலுவலகத்தின் பூட்டு உடைக்கப்பட்டு, வேறு பூட்டு மாற்றப்பட்டிருந்தது. மேலும் அங்கிருந்த, வைகோ, அண்ணா, பெரியார் படங்கள், பிளாக்ஸ் போர்டு, கொடிக்கம்பம் உள்ளிட்ட பொருட்கள் காணாமல் போயிருந்தன. இப்பொருட்களை கடையநல்லூர் சட்டப்பேரவை உறுப்பினர் தி.மு. ராசேந்திரன் எடுத்துச் சென்றதாக தெரிகிறது. எனவே, அவர் மீது உரிய விசாரணை நடத்தி சட்டப்படி நடவடிக்கை எடுக்க வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மதுரவாயல் அருகே பிரசித்தி பெற்ற ஸ்ரீசெல்வ விநாயகர் ஆலய கும்பாபிஷேகம் வெகு விமர்சையாக நடைபெற்றது

சென்னை, செப்.17-

சென்னை, மதுரவாயல் 147 ஆவது வார்டு கங்கா நகர் பகுதியில் அருள்மிகு ஸ்ரீ செல்வ விநாயகர் ஆலயம் புதுப்பிக்கப்பட்டு ஜீர்னோர்தாரண நூதன ராஜகோபுர அஷ்ட பந்தன மகா கும்பாபிஷேகம் இன்று வெகு விமர்சியாக நடைபெற்றது இந்த நிலையில் அதற்கான அனைத்து ஏற்பாடுகளும்

ஆலய குழு தலைவரும் மற்றும் ஆலய ஆலோசகருமான முன்னாள் கவுன்சிலர் லயன். மாதவன் மற்றும் ஆலய தலைவர் கரிகாலன் ஆகியோரின் ஏற்பாட்டில் நடந்த நிலையில் அனைத்து கால பூஜைகளும் நடைபெற்ற நிலையில் விநாயகப் பெருமானுக்கு , மங்கல இசை சிறப்பு பூஜைகள் அலங்காரத்துடன் நடைபெற்றது. இதில் சிறப்பு அழைப்பாளராக வேலக்குறிச்சி ஆதீனம் மதுரவாயல் முன்னாள் சட்டமன்ற தொகுதி உறுப்பினர் காரம்பாக்கம் க கணபதி கலந்துகொண்டு சாமி தரிசனம் செய்தனர் அதனைத் தொடர்ந்து மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது இதில் விமான கலசத்திற்கு புனித நீர் ஊற்றப்பட்டு வெகு விமர்சையாக நடந்தது. புனித நீரானது பக்தர்கள் மீது தெளிக்கப்பட்டது. இதனை அப்பகுதியைச் சேர்ந்த ஆயிரத்துக்கும் மேற்பட்ட பொதுமக்கள், பக்தர்கள் என ஏராளமானோர் பங்கேற்று சாமி தரிசனம் செய்தனர் அதனைத் தொடர்ந்து மூவாயிரம் பேருக்கு அன்னதானம் கோவில் நிர்வாகம் சார்பில் வழங்கப்பட்டது. மாமன்ற உறுப்பினர் ரமணி மாதவன் செயலாளர் செல்வராஜ் துணைத்தலைவர் வெங்கடேச பெருமாள் பொருளாளர் திருஞானம் துணைச் செயலாளர் நாகராஜ் மற்றும் கோவில் நிர்வாகிகள் ஊர் பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர். கோயில் சபதி சிதம்பரம் செந்தில் சிறப்பாக செய்து இருந்தார்.





# பாடியநல்லூர் ஸ்ரீ செல்வ விநாயகர் ஆலயத்தில் விநாயகர் சதுர்த்தி விழா

மாதவரம், செப்.17-

மாதவரம் தொகுதி சோழவரம் ஒன்றியம் பாடியநல்லூர் ஊராட்சியில் உள்ள அருள்மிகு ஸ்ரீ செல்வ விநாயகர் ஆலயத்தில் 59-ம் ஆண்டு விநாயகர் சதுர்த்தி விழா ஆலய நிர்வாகியும் சிவா அறக்கட்டளை நிறுவனருமான ஓ.கே. பாபு தலைமையில் நடைபெற்றது.ஆலய பொறுப்பாளர்கள் விஜயரங்கம், சுப்பிரமணி, கோவிந்தரோஜ், மோகன், சாந்தகுமார், எல்லையப்பன், கெங்காதுரை, தனசேகர், ரஜினி குமார், கஜேந்திரன், சம்பத், வேலு, சுமோ ரவி, பாபு, சுரேஷ், அரிபாபு, வெங்கடேசன், வெங்கட், ஜெயக்குமார், பாண்டியன், மணி, உதயா, சரவணன், சுரேந்திரன், சஞ்சய், சந்தோஷ், வேலு, மணி, ஜீவா ஆகியோர் முன்னிலை வகித்தனர்.நிகழ்ச்சியில் கணபதி ஹோமத்துடன் அருள்மிகு ஸ்ரீ செல்வ விநாயகருக்கு விசேஷ அபிஷேக ஆராதனையும், அர்ச்சனையும், யாக பூஜையும், பல்வேறு சிறப்பு பூஜைகளும் செய்து பழங்கள் மற்றும் இனிப்புகளை படையலிட்டு தூப தீப ஆராதனை காண்பிக்கப்பட்டது. இதில் சுற்றுவட்டார பக்தர்கள், கிராம பொதுமக்கள் திரளாக கலந்துகொண்டு அர்ச்சனை செய்து சுவாமி தரிசனம் செய்தனர். முடிவில் உற்சவர் சிறப்பு அலங்காரத்துடன் மேளதாளத்துடன் திருவீதி உலாநடைபெற்றது. மேலும் இவ்விழாவை முன்னிட்டு பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது.



■ சென்னை ஈக்காடுதாங்கள்,மறைந்த டெல்டா இரா.நாராயணசாமி படையாட்சியார் அவரது 90-வது பிறந்தநாள் விழா ஈக்காட்டுத்தாங்கல் அவர்களது அலுவலகத்தில் இளமாறன் தலைமையில் கொண்டாடப்பட்டது. மலர்களால் அலங்கரிக்கப்பட்ட திருவுருவ படத்துக்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செய்தனர்,திமுக முன்னாள் மத்திய இணை அமைச்சர் எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி.முன்னாள் மத்திய அமைச்சர் ஏ.கே.மூர்த்தி, வீர வன்னியர் பேரவை மாவட்ட செயலாளர் சைதை மோகன் கலந்துகொண்டு சிறப்பித்தார், விழாவுக்கு வருகை தந்த அனைவரையும் டெல்டா சேர்மன் குரூப்ஸ் என். இளமாறன்,ஸ்ரீ பாலாஜி மருத்துவக் கல்லூரி சேர்மன் மருத்துவர். ஜே.ஸ்ரீநிஷா இளமாறன் வரவேற்றனர், நிகழ்ச்சியில் வருகை தந்த அனைவருக்கும் மதிய உணவு வழங்கப்பட்டது. அனைத்து ஏற்பாடுகளையும் மேலாளர் ராமு சிறப்பாக செய்து இருந்தார்.

## எஸ்.பி.வேலுமணிக்கு எதிரான நீதிமன்ற அவமதிப்பு வழக்கு

# அறிக்கை தாக்கல் செய்ய மத்திய அரசுக்கு ஆணை

சென்னை, செப்.17-

அதிமுக முன்னாள் அமைச்சர் எஸ்.பி.வேலுமணி தொடர்பான வழக்கில் 2 ஐஏஎஸ் அதிகாரிகள் மீது வழக்கு தொடருவதற்கான அனுமதி நடைமுறையை 2 மாதத்தில் முடித்து தமிழக அரசுக்கு கூறுங்கள் என சென்னை உயர் நீதிமன்றம் மத்திய அரசுக்கு உத்தரவிட்டுள்ளது. கடந்த 2025 நவம்பர் முதல் தற்போது வரை மேற்கொள்ளப்பட்ட நடைமுறைகளை விளக்கி பிரமாண பத்திரமாக தாக்கல் செய்யவும் ஆணையிட்டுள்ளார். டெண்டர் முறைகேடு தொடர்பான நீதிமன்ற அவமதிப்பு வழக்கு நவம்பர் 12க்கு நவம்பர் 12-ஆம் தேதிக்கு ஒத்திவைத்துள்ளது.





## தாம்பரத்தில் பேரறிஞர் அண்ணா 118வது பிறந்தநாளை முன்னிட்டு

# தே.மு.தி.க., மேற்கு பகுதி சார்பில் அண்ணா சிலைக்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினர்

தாம்பரம், செப்.17-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரத்தில் பேரறிஞர் அண்ணா அவர்களின் 118வது பிறந்தநாளை முன்னிட்டு தாம்பரம் மேற்கு பகுதி தேமுதிக சார்பில் மேற்கு பகுதி கழகச் செயலாளர் மார்க்கெட் ஞானப்பால் தலைமையில் மேற்கு பகுதி கழக பொருளாளர் ஜார்ஜ் முன்னிலையில் நடைபெற்றது

இதில் சிறப்பு அழைப்பாளராக செங்கல்பட்டு மாவட்ட கழகத் துணைச் செயலாளர் மா.செழியன் கலந்துகொண்டு அண்ணாவின் திருவுருவ சிலைக்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்

இந்த நிகழ்ச்சியில் தெற்கு பகுதி கழக செயலாளர் கேட் எம் தர்மா, மேற்கு பகுதி நிர்வாகிகள் மகளிர் அணி துணைச் செயலாளர்கள் பத்மா, செல்வி, 49வது வட்டச் செயலாளர் கே.வி. மணி, மத்திய பகுதி கழகத் துணைச் செயலாளர் சதீஷ், 62வது வட்ட அவைத் தலைவர் காஜா மொய்தீன், பொதுமக்கள் உடன் இருந்தனர்.



■ விடுதலைப் போராட்ட வீரர் எஸ்.எஸ்.இராமசாமி படையாட்சியார் 109 - வது பிறந்தநாளை முன்னிட்டு அரசின் சார்பில் (16.09.2026) நேற்று திருப்பத்தூர் மாவட்டம், வாணியம்பாடி பேருந்து நிலையத்தில், அமைந்துள்ள அன்னாரது திருவுருவச்சிலைக்கு தமிழ்நாடு சட்டப்பேரவைத் தலைவர் ஜே.சி.டி.பிரபாகர், வனத்துறை அமைச்சர் ஆர்.வீ.இரஞ்சித்குமார் மலர்மாலை அணிவித்து, மலர் தூவி மரியாதை செலுத்தினர். இந்நிகழ்ச்சியில், திருப்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் Dr.N.திருப்பதி. BVSc., மாவட்ட வருவாய் அலுவலர் இரா.பாலசுப்ரமணியன், வாணியம்பாடி வருவாய் கோட்டாட்சியர் சிவக்குமார், தவேக மாவட்ட செயலாளர்கள் முனுசாமி, நவீன் குமார் அரசு அலுவலர்கள் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

# அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாகவே என் வீட்டில் சோதனை அன்பில் மகேஷ் குற்றச்சாட்டு

சென்னை, செப்.17-

சென்னை மற்றும் திருச்சியில் உள்ள முன்னாள் அமைச்சர் அன்பில் மகேசின் இல்லத்தில் மத்திய குற்றப்பிரிவு போலீசார் மேற்கொண்ட 8 மணி நேர சோதனை நிறைவடைந்துள்ளது. சோதனையின் போது தான் முழு ஒத்துழைப்பு வழங்கியதாக போலீசார் தெரிவித்ததாக அவர் குறிப்பிட்டுள்ளார். அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாகவே நடத்தப்பட்டுள்ளதாக குற்றம்சாட்டியுள்ள அவர், விசாரணையின் ஒரு பகுதியாக வரும் 18ஆம் தேதி நேரில் ஆஜராகுமாறு தனக்கு சம்மன் அனுப்பப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்

# பம்மலில் அந்திரேயா சகோதர்கள் மாநாடு : பாஸ்டர் டாக்டர் இம்மானுவேல் சந்திரன் தலைமையில் நடைபெற்றது




பம்மல், செப்.17–
செங்கல்பட்டு மாவட்டம் பல்லாவரம் அடுத்த பம்மல் தனியார் இடத்தில் ஆந்திரேயா சகோதர்கள் மாநாடு பாஸ்டர் டாக்டர் இம்மானுவேல் சந்திரன் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு முன்னாள் சடமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி கலந்து கொண்டு ஆண்களின் வளர்ச்சிக்கும் அவர்கள் நல்வழியில் செல்வதும் எவ்வளவு பிரச்சனை வந்தாலும் அதை மனைவி எனும் பெண் அறிந்து கொண்டு அதனை தீர்த்து வைப்பவர் எனவும் பல்வேறு கருத்துக்களை கூறி சிறப்புரையாற்றினர். சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி அவர்களுக்கு பாஸ்டர் டாக்டர் இமானுவேல் சந்திரன் பூங்கொத்து வழங்கியும் சால்வை அணிவித்து வாழ்த்து தெரிவித்தார்.

மன உளைச்சலில் இருக்கும் ஆண்கள் எதிர்கால நம்பிக்கையும் மன அமைதியும் பெற்று வாழ்வது எவ்வாறு என்பதை ஆன்மீக போதனையின் மூலமாக ரெவரென்ட் டாக்டர். இம்மானுவேல் சந்திரன் அவர்கள் சிறப்புரையாற்றி போதனை வழங்கினார்.

இம்மாநாட்டில் எண்ணற்ற சகோதரர்கள் கலந்து கொண்டு ஆன்மீக போதனையுடன் இறையாசீர் பெற்று சென்றனர். இம்மாநாட்டில் பாவ பழக்க வழக்கங்களில் இருந்து ஆண்டவர் இயேசுவினால் விடுவிக்கப்பட்ட ஆண்கள் தங்களுடைய அனுபவ சாட்சியை பகிர்ந்து கொண்டு ஆண்டவர் இயேசுவை மகிமைப்படுத்தினர்.

இன்று அவர்கள் குடும்பங்கள் மகிழ்ச்சியுடன் வாழ்வதை நேரடியாக சாட்சி பகிர்ந்தனர். மேலும் மாநாட்டில் கலந்து கொண்ட சகோதரர்கள் மிகுந்த மகிழ்ச்சியுடன் பங்கு பெற்று கடந்து சென்றனர்.

# அழிஞ்சிவாக்கம் அருள்தரும் விநாயகர் ஆலயத்தில் விநாயகர் சதுர்த்தி விழா

மாதவரம், செப்.17–
மாதவரம் தொகுதி புழல் ஒன்றியம் அழிஞ்சிவாக்கம் ஊராட்சி புது தெருவில் அமைந்துள்ள அருள்மிகு அருள்தரும் விநாயகர் ஆலயத்தில் விநாயகர் சதுர்த்தி விழா சிறப்பாக நடைபெற் றது. நிகழ்ச்சியில் சுவாமிக்கு பால், தயிர், இளநீர், மஞ்சள், குங்குமம், பன்னீர், சந்தனம், தேன், ஜவ்வாது உள்ளிட்ட பல்வேறு வாசனை திரவியங்களால் அபிஷேகம் செய்து வண்ணமலர்கள் மற்றும் வெள்ளி கவசத்தால்



சிறப்பு அலங்காரம் செய்யப்பட்டு பின்னர் இனிப்புகள் மற்றும் பழங்களை படையலிட்டு விநாயகர் போற்றியுடன் மகா தீபாராதனை காண்பிக்கப்பட்டது. இதில் ஆன்மிக சிந்தனையாளர்கள் உட்பட சுற்றுவட்டார பக்தர்கள் கலந்து கொண்டு சுவாமி தரிசனம் செய்தனர். முடிவில் ஆலயம் சார்பில் பக்தர்களுக்கு பிரசாதம் வழங்கப்பட்டது.

# தாம்பரம் சாலையோர மற்றும் சிறுகடை வியாபாரிகள் சங்கங்களின் கூட்டமைப்பு சார்பில் ஆலோசனை கூட்டம்



தாம்பரம், செப்.17–
செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் பகுதியில் சாலையோர மற்றும் சிறுகடை வியாபாரிகள் எதிர்கொள்ளும் பல்வேறு பிரச்சினைகள் தொடர்பாக சம்பந்தப்பட்ட வியாபாரிகள் கூட்டமைப்பு சார்பில் தாம்பரம் சிஐடியு சாலையோர வியாபாரிகள் சங்கம் அமைப்பாளர்கள் இராஜாமணி, எம். ஜாபர் சாதிக், ஆகியோர் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் சாலையோர வியாபாரிகளின் வாழ்வாதாரம், கடைகள் தொடர்பான நடவடிக்கைகள், வியாபாரிகளுக்கு ஏற்படும் இடையூறுகள் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் குறித்து விவாதிக்கப்பட்டன.

மேலும், 18.09.2026 அன்று காலை 10.00 மணியளவில் நடைபெற உள்ள அடுத்தகட்ட நிகழ்வுகள் மற்றும் நடவடிக்கைகள் குறித்தும் ஆலோசிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

வியாபாரிகளின் உரிமைகள் மற்றும் வாழ்வாதாரத்தை பாதுகாக்க, அதிகாரிகளிடம் உரிய முறையில் கோரிக்கைகளை முன் வைத்து தொடர்ந்து நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என சங்க நிர்வாகிகள் தெரிவித்தனர்.

இந்த நிகழ்ச்சியில் கூட்டமைப்பு சங்க செயலாளர் ஆணை பன்னீர்செல்வம், எம். எம் ரோடு தலைவர் பா.முத்தையன், அப்துல் ரசாக், அண்ணா சிறுகடை வியாபாரிகள் சங்கம் தலைவர் எம் காஜாமுதீன், செயலாளர் எஸ்.எம். அனிபா, தந்தை பெரியார் சுரங்கப்பாதை வியாபாரிகள் சங்கம் தலைவர் எஸ். எம்.முஸ்தபா, காய்கறி வியாபாரிகள் சங்கம் செயலாளர் வி.உமாபதி, ஜிஎஸ்டி ரோடு பேருந்து நிறுத்தம் சாலையோர வியாபாரிகள் சங்கத் தலைவர் எல்.ராஜேஷ், வணிக சங்கங்களின் பேரவை மாவட்ட துணைத் தலைவரும் தாம்பரம் மாநகராட்சி அனைத்து வியாபாரிகள் சங்கம் தலைவர் மார்க்கெட் ஞானப்பால் மற்றும் வியாபாரிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.




# பட்டினப்பாக்கத்தில் புதிய தலைமைச் செயலகம் கட்ட விடமாட்டோம்

## சீமான் கடும் எதிர்ப்பு

சென்னை, செப்.17–
தவெக அரசு பட்டினப்பாக்கத்தில் கட்ட திட்டமிட்டுள்ள புதிய தலைமைச் செயலகத்தை கட்டப்போவதும் இல்லை, கட்டவிடப்போவதும் இல்லை என நாம் தமிழர் கட்சயின் ஒருங்கிணைப்பாளர் சீமான் கூறியுள்ளார். செய்தியாளர்களிடம் பேசிய சீமான், மறைந்த முன்னாள் முதல்வர் ஜெயலலிதா அரசியல் காழ்ப்புணர்ச்சியால் தலைமைச் செயலகத்தை மருத்துவமனையாக மாற்றினார். தற்போது தமிழ்நாட்டின் நிதி நிலைமை சீராக இல்லை என்று தாங்கள் வாக்குறுதி கொடுத்த பல திட்டங்களை செயல்படுத்தாமல் தவெக அரசு காலம் தாழ்த்தி வருகிறது.

ரூ.13.5 லட்சம் கோடி கடன் இருப்பதாக அரசின் வெள்ளை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. வாங்கிய கடனுக்கு வட்டிக்கு வட்டி கட்ட கூடிய நிலையில் மாநிலத்தின் பொருளாதார சுமை இருக்கும் நிலையில் ரூ.1,200 கோடி செலவில், அதுவும் மக்கள் வாழும் நெரிசல் மிகுந்த பகுதியில் புதிய தலைமைச் செயலகம் அமைக்க முயற்சிப்பது அவசியமா என கேள்வி எழுப்பினார். அப்படி அமைக்க வேண்டும் என்றல் ஓமந்துராரர் மருத்துவமனையை வேறு இடத்திற்கு மாற்றி விட்டு, அந்த இடத்தை மீண்டும் செழுமைப்படுத்தி புதிய தலைமைச் செயலகமாக மாற்றலாம் என்று குறிப்பிட்டார்.

தொடர்ந்து பேசிய சீமான், தலைமைத்துவம் குறித்து நடிகர் விஜய் சேதுபதி பேசிய பொதுவான கருத்தைத் தங்களுக்கு எதிராக எடுத்துக்கொண்டு, தவெகவினர் அவரை கடுமையாக விமர்சிப்பதும் இழிவுபடுத்துவதும் கண்டனத்திற்குரியது. விஜய் சேதுபதி யாருடைய பெயரையோ, எந்த அரசியல் கட்சியையோ சுட்டிக்காட்டவில்லை என்றும், கருத்தைக் கருத்தால் எதிர்கொள்ள வேண்டுமே தவிர வசைபாடக் கூடாது என்றும் சீமான் வலியுறுத்தியுள்ளார்.




# கிருஷ்ணகிரியில் ரூ.4 லட்சம் செலவில் கே.ஆர்.பி அணையில் விநாயகர் வலைவீசி மீன் பிடிப்பது போன்ற சிலை

கிருஷ்ணகிரி, செப்.17–
கிருஷ்ணகிரியில் ரூ.4 லட்சம் செலவில் கே.ஆர்.பி அணையில் விநாயகர் வலைவீசி மீன் பிடிப்பது போன்ற சிலை அமைக்கப்பட்டுள்ளது பார்வையாளர்களை வெகுவாக கவர்ந்துள்ளது.

விநாயகர் சதுர்த்தி விழா நேற்று முன்தினம் கொண்டாடப்பட்டது. கிருஷ்ணகிரி மாவட்டத்தில் மொத்தம் 1,780 இடங்களில் விநாயகர் சிலை வைத்து வழிபாடு நடத்தி வருகின்றனர். கிருஷ்ணகிரி நகரில், இந்து அமைப்புகள் மற்றும் பொதுமக்கள் சார்பில், 83 இடங்களில் பல்வேறு வகையான விநாயகர் சிலைகளை வைத்து வழிபட்டு வருகின்றனர்.

அதன்படி, கிருஷ்ணகிரி பழையபேட்டை தஞ்சாவூர் மாரியம்மன் கோவி=யில் முன்பு, அப்பகுதியை சேர்ந்த இளைஞர்கள் சிலர், ரூ.4 லட்சம் செலவில், கே.ஆர்.பி., அணை மற்றும் செல்லியம்மன் மார்க்கண்டேயன் சுவாமி கோயில் மாட்டு வாயில் இருந்து தண்ணீர் வருவது போன்று, அதில் விநாயகர் வலைவீசி மீன்பிடிப்பது போன்று அமைத்திருந்தது பார்வையாளர்களை வெகுவாக கவர்ந்துள்ளது.

அதே போல், கிருஷ்ணகிரி புதுப்பேட்டை திருவள்ளுவர் தெருவில் அப்பகுதி இளைஞர்கள் 3வது ஆண்டாக ரூ.3 லட்சம் செலவில் குகை அமைத்து பிரமாண்ட விநாயகர் சிலையை வைத்து வழிபட்டு வருகின்றனர். இந்த விநாயகர் சிலைகளை ஏராளமான பொதுமக்கள் மற்றும் பக்தர்கள் நேரில் சென்று கண்டுகளித்து வருகின்றனர்.



# பாடியநல்லூர் சிவன் கோயில் நிர்வாகிகள்-இளைஞரணி ஏற்பாட்டில் விநாயகர் சதுர்த்தி விழா கோலாகலம்

மாதவரம், செப்.17–
மாதவரம் தொகுதி சோழவரம் ஒன்றியம் பாடியநல்லூர் ஊராட்சியில் விநாயகர் சதுர்த்தி விழாவை முன்னிட்டு பாடியநல்லூர் சிவன் கோயில் நிர்வாகிகள் மற்றும் ஆலய இளைஞரணி சார்பில் சிவன் கோயில் நிர்வாக செயலாளர் சரவணன் மற்றும் ஆலய இளைஞரணி ஏற்பாட்டில் 10 அடி உயரம் உள்ள லட்சுமி மற்றும் சரஸ்வதி தாயாருடன் விநாயகர் சிலை வைத்து கணபதி ஹோமத்துடன் இனிப்பு மற்றும் பழங்களை படையலிட்டு மகா தீபாராதனை காண்பிக்கப்பட்டது. மேலும் சிறப்பு பூஜைகள் நடைபெற்றது. இவ்விழாவிற்கு சுற்றுவட்டார பக்தர்கள், கிராமபொதுமக்கள் திரளாக கலந்துகொண்டு அர்ச்சனை செய்து சுவாமி தரிசனம் செய்தனர். முடிவில் பக்தர்களுக்கு பிரசாதங்கள் வழங்கப்பட்டது.

# தேனியில், இந்து எழுச்சி முன்னணி சார்பில் விநாயகர் சிலைகள் ஊர்வலம் கோலாகலமாக நடைபெற்றது

தேனி, செப்.17–
தேனி மாவட்ட இந்து எழுச்சி முன்னணியின் சார்பில் 11-ம் ஆண்டு விநாயகர் சதுர்த்தி விழாவை முன்னிட்டு தேனி நகர் மற்றும் தேனியை சுற்றி உள்ள பகுதிகளில் 3 அடி முதல் 10 அடி வரையிலான 100-க்கும் மேற்பட்ட விநாயகர் சிலைகள் வைத்து சிறப்பு வழிபாடு செய்யப்பட்டது. இதில் தலைமை விநாயகர் சிலை தேனி அல்லிநகரம் நகராட்சி அலுவலகம் அருகே வைத்து பிரதிஷ்டை செய்து கணபதி ஹோமம் மற்றும் சிறப்பு வழிபாடு செய்யப்பட்டது. இந்நிகழ்ச்சியில் இந்து எழுச்சி முன்னணி நிறுவனர் பொன் ரவி, மாவட்ட தலைவர் இராமராஜ், மாவட்ட செயலாளர் இராமமூர்த்தி, மாவட்ட அமைப்பாளர் கோவிந்தராஜ், மாவட்ட பொருளாளர் செந்தில்குமார் உள்பட பொறுப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர். இதனைத் தொடர்ந்து வழிபாடு செய்யப்பட்ட விநாயகர் சிலைகள் ஊர்வலம் நடைபெற்றது. இந்த ஊர்வலத்திற்கு இந்து எழுச்சி முன்னணி நிறுவனர் பொன் ரவி, மாவட்ட தலைவர்



இராமராஜ் ஆகியோர் தலைமை தாங்கினர். மாவட்ட அமைப்பாளர் கோவிந்தராஜ், மாவட்ட செயலாளர் இராமமூர்த்தி, மாவட்ட பொருளாளர் செந்தில்குமார், தேனி நகர தலைவர் சிவராமன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.ஊர்வலத்தில் ஆன்மிக அருளாசியாக, பூஜ்ய ஸ்ரீ ஓங்காரானந்த மகா சுவாமிகளின் சீடர் சுவாமி சிவமயானந்த சரஸ்வதி சுவாமிகள் மற்றும் சுவாமி சுடலையானந்தா சுவாமிகள் கலந்து கொண்டு பக்தர்களுக்கு அருளாசி வழங்கினர்.

கம்பம் சட்டமன்ற உறுப்பினர் PLA ஜெகநாத் மிஸ்ரா, பாலசங்கா S.T. கதிரேசன், ரத்தினம் பஸ் உரிமையாளர் ஆன்மிக செல்வர் R. சுந்தரவடிவேல் , பாரதீய பார்வர்டு பிளாக் மாநில அமைப்பு செயலாளர் M.P.S. முருகன், அகில இந்திய பார்வர்டு பிளாக் தேனி மாவட்டப் பொதுச்செயலாளர் S.R.சக்கரவர்த்தி உள்பட முக்கிய பிரமுகர்கள் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

இந்த ஊர்வலம் நிகழ்வில் இந்து எழுச்சி முன்னணி மாவட்ட செயற்குழு உறுப்பினர் N. சக்திவேல், மாவட்ட நிர்வாகிகள், நகர நிர்வாகிகள், இந்து எழுச்சி முன்னணி பொறுப்பாளர்கள், இந்து எழுச்சி முன்னணி மகளிர் அணியினர் ஏராளமானோர் கலந்து கொண்டனர். ஊர்வலத்தின் போது விநாயகர் சிலைகள் மேளதாளம் முழங்க, தாரை தப்பட்டை, தேவராட்டம், கேரள கலைகளுடன், பெண்கள் முளைப்பாரி ஆகியவற்றுடன் 100-க்கும் மேற்பட்ட சிலைகள் வாகனங்களில் கோலாகலமாக அணிவகுத்து சென்றன. இந்த ஊர்வலத்தை தேனி நகரில் உள்ள ஆயிரக்கணக்கான பொதுமக்கள் கண்டு களித்தனர். ஊர்வலம் தேனி அருகே உள்ள பொம்மையகவுண்டன்பட்டி சாலை பிள்ளையார் கோவிலில் இருந்து தொடங்கி நகர் பகுதி வழியாக தேனி நேரு சிலையை கடந்து அரண்மனைப்புதூர் பகுதியில் செல்லக்கூடிய முல்லை ஆற்றில் விநாயகர் சிலைகள் ஒன்றன் பின் ஒன்றாக கரைக்கப்பட்டது.

ஊர்வலத்தின் போது அசம்பாவித சம்பவங்கள் ஏதும் நடைபெறாமல் இருக்க நூற்றுக்கணக்கான போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர்.



# கிருஷ்ணகிரியில் கிழக்கு மாவட்ட தி.மு.க., சார்பில் அண்ணாவின் 118வது பிறந்த நாள் விழா

## மாவட்ட செயலாளர் மதியழகன் தலைமையில் நடந்தது

கிருஷ்ணகிரி, செப்.17–
கிருஷ்ணகிரியில் கிழக்கு மாவட்ட திமுக சார்பில் அண்ணாவின் 118வது பிறந்த நாள் விழா, மாவட்ட செயலாளர் மதியழகன் தலைமையில் நடந்தது.

கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட திமுக சார்பில், மாவட்ட திமுக அலுவலகத்தில் அண்ணாவின் 118வது பிறந்த நாள் விழா கொண்டாடப்பட்டது. இந்த விழாவிற்கு கிழக்கு மாவட்ட செயலாளரும், முன்னாள் எம்எல்ஏ.வுமான மதியழகன் தலைமை வகித்து, அண்ணாவின் திருவுருப்படத்திற்கு மாலை அணிவித்து, மலர் தூவி அஞ்சலி செலுத்தினார். அதனை தொடர்ந்து நிர்வாகிகள் மலர் தூவி அஞ்சலி செலுத்தினர்.

பின்னர், புதிய பஸ் நிலையம் அருகில் உள்ள அண்ணா சிலை அருகே, நகர பொறுப்பாளர்கள் அஸ்லாம், வேலுமணி ஆகியோரின் ஏற்பாட்டில் அண்ணாவின் பிறந்த நாள் விழா கொண்டாடப்பட்டது. இந்த விழாவிற்கு மாவட்ட செயலாளர் மதியழகன் எம்எல்ஏ., தலைமை வகித்து, அண்ணா சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். அப்போது கேக் வெட்டி அனைவருக்கும் வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில், முன்னாள் மாவட்ட செயலாளர் செங்குட்டுவன், மாவட்ட அவைத்தலைவர் தட்ரஅள்ளி நாகராஜ், மாநில விவசாய அணி துணை செயலாளர் டேம். வெங்கடேசன், மாவட்ட துணை செயலாளர்கள் கோவிந்தசாமி, சாவித்திரி கடலரசுமூர்த்தி, மாவட்ட பொருளாளர் கதிரவன், செயற்குழு உறுப்பினர் கிருபாகரன், பொதுக்குழு உறுப்பினர் நாகராசன், முன்னாள் நகர்மன்றத் தலைவர் பரிதாநவாப், முன்னாள் நகர செயலாளர் நவாப், ஒன்றிய செயலாளர்கள் தனசேகரன், அறிஞர், சுப்பிரமணி, குண. வசந்தரசு, நாராயணன், சாந்தமூர்த்தி, மகேந்திரன், காந்தி, இளையராஜா, பேரூர் செயலாளர் தம்பிதுரை, மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் தினேஷ்ராஜன், நிர்வாகிகள் அம்சவேணி செந்தில்குமார், கனல். சுப்பிரமணி, சேரன், மணி விஜயன், ஜெயேந்திரன், பரந்தாமன், லட்சுமிபிரியா, புஷ்பா, வள்ளியம்மாள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்துகொண்டனர்.

மாலை தந்தி

வியாழக்கிழமை 17.09.2026

# சிவகங்கை அரசு மருத்துவமனையில் ஆட்சியர் ஆய்வு; "தாய்மாமன் தங்க மோதிரம்" திட்ட முன்னேற்பாடுகள் குறித்து ஆய்வு

சிவகங்கை, செப்.17–

சிவகங்கை மாவட்ட அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் மாவட்ட ஆட்சியர் ப. ஆகாஷ், "தாய்மாமன் தங்க மோதிரம்" திட்டத்திற்கான முன்னேற்பாடுகள் குறித்து நேரில் ஆய்வு மேற்கொண்டார்.

அரசிடமிருந்து பெறப்படும் தங்க மோதிரங்களை பாதுகாப்பாகப் பெற்று, உரிய நடைமுறைகளைப் பின்பற்றி பாதுகாப்புப் பெட்டகத்தில் வைப்பதற்கான ஏற்பாடு களையும்



ஆட்சியர் ஆய்வு செய்தார்.

உடன் மருத்துவக் கல்லூரி முதல்வர் கலைவாணி மற்றும் அரசு மருத்துவ அலுவலர்கள் உள்ளிட்ட பலர் இருந்தனர்.

# கல்விப்பணியில் அர்ப்பணிப்பு: ஆசிரியர் அ.தீபாவுக்கு "நவரத்தினா கல்விச்செம்மல்" விருது

சிவகங்கை, செப்.17–

கல்வி வளர்ச்சிக்காக தொடர்ந்து அர்ப்பணிப்புடன் பணியாற்றி வரும் ஆசிரியர்களை கௌரவிக்கும் வகையில் வழங்கப்படும் "நவரத்தினா கல்விச்செம்மல் விருது 2026", சிவகங்கை மாவட்டம் சாக்கோட்டை ஒன்றிய ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி இடைநிலை ஆசிரியர் அ. தீபா அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

திண்டுக்கல் மாவட்டம் சின்னாளப்பட்டியில் செயல்பட்டு வரும் பசுமை வாசல் பவுண்டேஷன் சார்பில், செப்டம்பர் 5 ஆசிரியர் தினத்தை முன்னிட்டு சிறந்த ஆசிரியர்களை




பாராட்டும் வகையில் இணையவழி விருது நிகழ்ச்சி நடைபெற்றது.

இதில் கல்வி வளர்ச்சிக்காக ஆற்றிவரும் தொடர்ச்சியான பணிகள், மாணவர்களின் கல்வி முன்னேற்றத்திற்காக மேற்கொள்ளப்படும் முயற்சிகள் மற்றும் கல்விப்பணியில் அர்ப்பணிப்புடன் செயல்பட்டு வருவது ஆகியவற்றை பாராட்டி ஆசிரியர் அ. தீபாவுக்கு "நவரத்தினா கல்விச்செம்மல் விருது 2026" வழங்கி கௌரவிக்கப்பட்டது.

ஆசிரியர் தினத்தை முன்னிட்டு வழங்கப்பட்டுள்ள இவ்விருது, கல்வித்துறையில் தொடர்ந்து சிறப்பாக பணியாற்றி வரும் ஆசிரியர் அ. தீபாவின் சேவைக்கு கிடைத்த சிறப்பான அங்கீகாரமாக அமைந்துள்ளது.




# திருப்புவனத்தில் பேரறிஞர் அண்ணாவின் 118-வது பிறந்த நாள் விழா

திருப்புவனம், செப்.17–

சிவகங்கை மாவட்டம் திருப்புவனம் மேற்கு ஒன்றியம் மற்றும் பேரூர் திமுக சார்பில், பேரறிஞர் அண்ணாவின் 118–வது பிறந்த நாள் விழா கொண்டாடப்பட்டது.

மாவட்ட துணைச் செயலாளரும், பேரூராட்சி மன்றத் தலைவருமான த. சேங்கை மாறன் தலைமையில் திமுகவினர் ஊர்வலமாகச் சென்று, சந்தைத் திடலில் வைக்கப்பட்டிருந்த பேரறிஞர் அண்ணாவின் உருவப்படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். தொடர்ந்து பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கப்பட்டன.

நிகழ்ச்சியில் பேரூர் செயலாளர் நாகூர்கனி, மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் பொற்கோ, பேரூராட்சி துணைத் தலைவர் ரகமத்துல்லாகான், ஒன்றிய கழக நிர்வாகிகள் ஏனாதி ராமலிங்கம், சங்கங்குளம் ஈஸ்வரன், பூவந்தி மணிகண்டன், அக்கினி ராஜ், மாங்குடி வெங்கடேசன், நகரத் துணைச் செயலாளர் மீனாட்சி சுந்தரம், புலியூர் ரவி, சொட்டதட்டி சக்தி முருகன், கலியாந்தூர் இளங்கோவன், மடப்புரம் மகேந்திரன், பிரமனூர் அறிவுகரசு, கொத்தங்குளம் குமரன், கீழடி சங்கர், தொமுச பிச்சை உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

மேலும் நகர இளைஞரணி அமைப்பாளரும் கவுன்சிலருமான கண்ணன், தொண்டரணி ராஜா, மீனவரணி அண்ணாமலை, மாணவரணி பாண்டியர் கிருஷ்ணன், இளைஞரணி காளிதாஸ், திருப்பதி, கவுன்சிலர்கள் வேல்பாண்டி, பாலகிருஷ்ணன், மாரிதாசன் மற்றும் கிளைக் கழக, வட்டக் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# பிரம்மோத்ஸவத்தை முன்னிட்டு திருப்பதிக்கு தினமும் 150 சிறப்பு பேருந்துகள் இயக்கம்

சென்னை, செப்.17–

பிரம்மோத்ஸவத்தை முன்னிட்டு தமிழகத்திலிருந்து திருப்பதிக்கு நாளை முதல் செப்.30 வரை தினமும் 150 சிறப்பு பேருந்துகள் இயக்கப்படும் என போக்குவரத்துத் துறை தெரிவித்து உள்ளது.

இது குறித்து அரசு விரைவுப் போக்குவரத்துக் கழக மேலாண் இயக்குநர் வெளியிட்ட அறிக்கை: இந்த ஆண்டு திருப்பதி திருமலையில் பிரம்மோத்ஸவத் திருவிழா நடைபெற உள்ளது.

இதை முன்னிட்டு தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்கள் மூலமாக சென்னை, திருச்சி, தஞ்சாவூர், சேலம், கோயம்புத்தூர், மதுரை, காரைக்குடி, கும்பகோணம், நாகப்பட்டினம், செங்கோட்டை, புதுச்சேரி, திருப்பத்தூர், திருவண்ணாமலை, காஞ்சிபுரம், தாம்பரம், கிருஷ்ணகிரி, தருமபுரி, அரூர் மற்றும் ஓசூர் ஆகிய இடங்களிலிருந்து திருப்பதிக்கும், திருப்பதியிலிருந்து மேற்குறிப்பிட்ட இடங்களுக்கும் நாளை முதல் செப்.30 வரை பக்தர்களின் தேவைக்கேற்ப தினமும் 150 சிறப்பு பேருந்துகள் இயக்கப்பட உள்ளது.

திருச்சி, தஞ்சாவூர், சேலம், கோயம்புத்தூர், மதுரை, காரைக்குடி, கும்பகோணம், நாகப்பட்டினம், செங்கோட்டை, புதுச்சேரி ஆகிய இடங்களிலிருந்து இயக்கப்படும் பேருந்துகளுக்கு முன்பதிவு வசதி செய்யப்பட்டுள்ளது. இந்த சேவையை பக்தர்கள் பயன்படுத்தி பயணம் மேற்கொள்ள www.tnstc.in இணையதளம் மற்றும் டிஎன்எஸ்டிசி செயலி மூலம் முன்பதிவு செய்து பயன் பெறுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

# சிவகங்கையில் 112 செவிலியர் காலிப்பணியிடங்கள் விண்ணப்பிக்க அழைப்பு

சிவகங்கை, செப்.17–

சிவகங்கை மாவட்டத்தில் தேசிய நலவாழ்வு குழுமத்தின் கீழ்,ஒப்பந்த அடிப்படையில் 112 செவிலியர் காலிப்பணியிடங்களை நிரப்புவதற்கான விண்ணப்பங்கள் 13.09.2026 முதல் வரவேற்கப்படுவதாக மாவட்ட ஆட்சியர் ப. ஆகாஷ் தெரிவித்துள்ளார்.



இந்தப் பணியிடங்கள் முற்றிலும் தற்காலிகமானவை என்றும், எக்காரணம் கொண்டும் பணி நிரந்தரம் செய்யப்படாது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பணியிடங்களுக்கான அறிவிப்பு, விண்ணப்பப் படிவம் மற்றும் அரசு ஆணையை சிவகங்கை மாவட்ட இணையதளமான sivaganga.nic.in–ன் வேலைவாய்ப்பு பிரிவில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்துடன் தேவையான ஆவணங்களின் நகல்களை இணைத்து, செயலாளர், மாவட்ட நலவாழ்வுச் சங்கம் / மாவட்ட சுகாதார அலுவலர், மாவட்ட சுகாதார அலுவலகம், முதன்மைக் கல்வி அலுவலர் அலுவலக மேல்தளம், மாவட்ட ஆட்சியர் வளாகம், சிவகங்கை 630562 என்ற முகவரிக்கு 25.09.2026–க்குள் பதிவுத் தபால் மூலம் அனுப்ப வேண்டும்.

தகுதியானவர்கள் குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் விண்ணப்பிக்குமாறு மாவட்ட ஆட்சியர் ப. ஆகாஷ் தெரிவித்துள்ளார்.

# நைனாங்குளம்அரசனி கிராமத்தில் விநாயகர் சதுர்த்தி விழா

சிவகங்கை, செப்.17–

'சிவகங்கை அருகே உள்ள நைனாங்குளம்அரசனி கிராமத்தில் பொதுமக்கள் சார்பில் விநாயகர் சதுர்த்தி விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

விழாவையொட்டி கிராம தேவதையான அருள்மிகு கூந்தப்பனை காளியம்மன் கோவிலில் பொங்கல் வைத்து சிறப்பு பூஜை மற்றும் வழிபாடுகள் நடைபெற்றன. தொடர்ந்து கோவில் அருகே அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த விநாயகர் சிலைக்கு பொங்கல், சுண்டல், கொழுக்கட்டை, அவல், பொறிகடலை, தேங்காய், பழங்கள் உள்ளிட்டவை படையலிட்டு சிறப்பு பூஜைகள் நடத்தப்பட்டன.



முன்னதாக கிராமத்தைச் சேர்ந்த பெண்கள் கும்மியடித்து, குலவையிட்டு பாரம்பரிய முறையில் வழிபாட்டில் ஈடுபட்டனர்.

விழாவிற்கான ஏற்பாடுகளை நைனாங்குளம்அரசனி கிராம பொதுமக்கள் மற்றும் கிராம இளைஞர்கள் இணைந்து செய்திருந்தனர்.





# உயர் நிலைப்பள்ளியில் காமராஜர் காலை உணவுத் திட்ட முன்னோட்டம்

மானாமதுரை, செப்.17–

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை ஒன்றியத்திற்குட்பட்ட மேலப்பசளை அரசு உயர்நிலைப் பள்ளியில், 6 முதல் 8–ஆம் வகுப்பு மாணவர்களுக்கான பெருந்தலைவர் காமராஜர் காலை உணவுத் திட்டத்தின் முன்னோட்டம் நடைபெற்றது.

தமிழக அரசு காலை உணவுத் திட்டத்திற்கு பெருந்தலைவர் காமராஜர் பெயரை சூட்டியுள்ளதுடன், திட்டத்தை 6 முதல் 8–ஆம் வகுப்பு மாணவர்களுக்கும் விரிவுபடுத்த அறிவித்துள்ளது.

இதன் முன்னோட்டமாக மேலப்பசளை அரசு உயர்நிலைப் பள்ளியில் மாணவ, மாணவிகளுக்கு காலை உணவு வழங்கும் நிகழ்ச்சியை சிவகங்கை மாவட்ட திட்ட இயக்குநர் (மகளிர் திட்டம்) அபிதா ஹனிப் தொடங்கி வைத்தார்.

நிகழ்ச்சியில் உதவி திட்ட அலுவலர்கள் ராஜ்மோகன், கனகசுந்தரி, பள்ளித் தலைமையாசிரியர் கலாராணி மற்றும் ஆசிரியர்கள் கலந்து கொண்டனர். தொடர்ந்து 6 முதல் 8–ஆம் வகுப்பு மாணவ, மாணவிகள் காலை உணவை அருந்தினர்.

# வழிப்பறி வழக்கில் 3 பேருக்கு தலா 3 ஆண்டுகள் கடுங்காவல் சிறை

இளையான்குடி, செப்.17–

சிவகங்கை மாவட்டம் இளையான்குடி அருகே உள்ள சாலைக்கிராமம் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதியில் பெண்ணிடம் 7½ பவுன் தங்கச் சங்கிலியை வழிப்பறி செய்த வழக்கில், குற்றவாளிகள் மூவருக்கு தலா 3 ஆண்டுகள் கடுங்காவல் சிறைத் தண்டனை மற்றும் ரூ.5,000 அபராதம் விதித்து இளையான்குடி குற்றவியல் நீதிமன்றம் எண்1 தீர்ப்பளித்துள்ளது.

சாலைக்கிராமம் அருகே தெற்கு சமுத்திரம் பகுதியைச் சேர்ந்த வட்டாயுதம் என்பவரின் மனைவி அன்னமயில் (62), கடந்த 07.08.2018 அன்று மாலை சுமார் 6 மணியளவில் சாலைக்கிராமம் சந்தையில் பொருட்கள் வாங்கிவிட்டு தெற்கு சமுத்திரம் கண்மாய் அருகே நடந்து சென்றுள்ளார்.

அப்போது காரில் வந்த இருவர் வழி கேட்பது போல் நடித்து, அன்னமயில் கழுத்தில் அணிந்திருந்த சுமார் 7½




பவுன் தங்கச் சங்கிலியை பறித்துச் சென்றதாக புகார் அளிக்கப்பட்டது.

இதுதொடர்பாக சாலைக்கிராமம் காவல் நிலையத்தில் குற்ற எண் 62/2018, இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 392–ன் கீழ் வழக்குப் பதிவு செய்யப்பட்டு விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

விசாரணையின் அடிப்படையில் பரமக்குடியைச் சேர்ந்த சக்திவேல் (45), சென்னையைச் சேர்ந்த செல்வகுமார் (30), தினேஷ்குமார் (31) ஆகிய மூவரும் கைது செய்யப்பட்டு நீதிமன்றக் காவலுக்கு அனுப்பப்பட்டனர்.

பின்னர் இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டு, இளையான்குடி குற்றவியல் நீதிமன்றம் எண்1ல் வழக்கு விசாரணை நடைபெற்று வந்தது. வழக்கில் தீர்ப்பளித்த நீதிமன்றம், மூவருக்கும் தலா 3 ஆண்டுகள் கடுங்காவல் சிறைத் தண்டனையும், ரூ.5,000 அபராதமும் விதித்தது.

மேலும், குற்றவாளிகள் மீது சிவகங்கை மற்றும் ராமநாதபுரம் மாவட்டங்களில் உள்ள பல்வேறு காவல் நிலையங்களில் திருட்டு உள்ளிட்ட வழக்குகள் நிலுவையில் இருப்பதாக காவல்துறை தெரிவித்துள்ளது.

இவ்வழக்கில் சிறப்பாக பணியாற்றிய அரசு வழக்கறிஞர், காவல் ஆய்வாளர் மற்றும் நீதிமன்ற காவலரை சிவகங்கை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அபிஷேக் குப்தா, ஐ.பி.எஸ். பாராட்டினார்.

# தாராபுரம் இடைத்தேர்தல் பணிகள்: மாவட்ட ஆட்சியர் தலைமையில் ஆலோசனைக் கூட்டம்

திருப்பூர், செப்.17–

திருப்பூர் மாவட்டம் தாராபுரம் (தனி) சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தல் 2026 தொடர்பான தேர்தல் பணிகள் குறித்து மாவட்ட தேர்தல் அலுவலரும், மாவட்ட ஆட்சியருமான டாக்டர் மனிஷ் நாரணவரே தலைமையில் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இந்திய தேர்தல் ஆணையத்தின் இணையதளத்திலும் தமிழ்நாடு உள்ளிட்ட மாநிலங்களுக்கான தற்போதைய இடைத்தேர்தல்கள் பட்டியலிடப்பட்டுள்ளன.

திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் நடைபெற்ற கூட்டத்தில், தேர்தல் பொது பார்வையாளர் அம்கோத்து ஸ்ரீ ரங்கநாயக், தேர்தல் காவல் பார்வையாளர் சுரேஷ் குமார் சாதிவே ஆகியோர் முன்னிலை வகித்தனர்.



தாராபுரம் இடைத்தேர்தலை முன்னிட்டு தேர்தல் நடத்தை விதிமுறைகளைக் கண்காணிக்க நியமிக்கப்பட்டுள்ள குழுக்கள், தங்களுக்கு ஒதுக்கப்பட்ட பகுதிகளில் தொடர்ந்து ஆய்வு மேற்கொள்ள வேண்டும் என அறிவுறுத்தப்பட்டது.

குறிப்பாக, உரிய ஆவணங்களின்றி நிர்ணயிக்கப்பட்ட அளவுக்கு மேல் பணம் எடுத்துச் செல்வது, மதுபானங்கள் மற்றும் பரிசுப் பொருட்கள் வழங்கப்படுவது தொடர்பாக தகவல் கிடைத்தால், சம்பந்தப்பட்ட குழுவினர் உடனடியாக நேரில் சென்று ஆய்வு மேற்கொள்ள வேண்டும் என தெரிவிக்கப்பட்டது.

வாக்குச்சாவடிகளில் தேவையான அடிப்படை வசதிகள், மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் பாதுகாப்பாக வைக்கப்படும் அறைகள் உள்ளிட்ட ஏற்பாடுகளை ஆய்வு செய்யவும், வேட்பாளர்களின் அன்றாட தேர்தல் செலவுகளை தேர்தல் செலவின கண்காணிப்புக் குழுவினர் முறையாக கண்காணிக்கவும் அறிவுறுத்தப்பட்டது.

தேர்தல் பணியில் ஈடுபட்டுள்ள அனைத்து அலுவலர்களும் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட பணிகளை ஒருங்கிணைந்து மேற்கொள்ள வேண்டும் என தேர்தல் பொது பார்வையாளர் அம்கோத்து ஸ்ரீ ரங்கநாயக் அறிவுறுத்தினார்.

கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் க. கார்த்திகேயன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் வாணிஈஸ்வரி, மகளிர் திட்ட இயக்குநர் மதுரா, தாராபுரம் வருவாய் கோட்டாட்சியர் ஃபெலிக்ஸ் ராஜா, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (தேர்தல்பொ) சதீஸ், தனி வட்டாட்சியர் (தேர்தல்) தேவராஜ் மற்றும் தேர்தல் பணி தொடர்பு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# முதலீடுகளை ஈர்க்க முதலமைச்சர் விஜய் லண்டன் செல்லவில்லை: நயினார் நாகேந்திரன் குற்றச்சாட்டு!

சென்னை, செப்.17–

முதலீடுகளை ஈர்ப்பதற்காக முதலமைச்சர் விஜய் லண்டன் செல்லவில்லை என தமிழ்நாடு பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன் குற்றம்சாட்டியுள்ளார்.History

சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், "முதலமைச்சர் லண்டன் சென்றதற்கான காரணம் என்ன என்பது குறித்து இதுவரை முறையான விளக்கம் அளிக்கப்படவில்லை. தொழில் முதலீடுகளை ஈர்ப்பதற்காகச் சென்றதாகக் கூறப்படுகிறது.

தொழில் முதலீடுகளில் கிரீன்ஃபீல்டு, பிரவுன்ஃபீல்டு என இரண்டு வகைகள் உள்ளன. ஏற்கனவே செயல்பட்டு வரும் தொழிலில் செய்யப்படும் முதலீடு பிரவுன்ஃபீல்டு முதலீடு. புதிதாக தொழில் தொடங்குவதற்கான முதலீடு கிரீன்ஃபீல்டு முதலீடு.

ஆனால், ஏற்கனவே செயல்பட்டு வரும் தொழில் நிறுவனங்களுக்காக ரூ.1,000 கோடிக்கு மேல் முதலீடு தொடர்பாகப் பேசியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. உதாரணமாக, ஈஜிடிஎஸ் குளோபல் டெலிவரி சர்வீசஸ் ஏற்கனவே செயல்பட்டு வரும் நிறுவனம்.

அதேபோல், தலைமைச் செயலகத்தை மாற்ற வேண்டும் என்று நான் ஏற்கனவே கூறியிருக்கிறேன். ரூ.1,200 கோடி என்கிறார்கள். ஆனால், இதுவரை எந்த இடம் என்பது முடிவு செய்யப்படவில்லை. திட்டமிடல் இல்லை, கட்டுமானத் திட்டம் தயாரிக்கப்படவில்லை, மதிப்பீடும் தயாரிக்கப்படவில்லை. அப்படியிருக்கும்போது ரூ.1,200 கோடி என்று எப்படி கூறுகிறார்கள்?" எனக் கேள்வி எழுப்பினார்.

மேலும், "முதலமைச்சர் ஒரு திரைப்படத்தில் நடித்தபோது மீனவர்களைக் காப்பாற்றுவது போன்ற கதாபாத்திரத்தில் நடித்தார். ஆனால், தற்போது மீனவர்களின் வீடுகள் இடிக்கப்படுவது கண்டனத்துக்குரியது. எனவே, அந்தத் திட்டத்திற்கான இடத்தை வேறு இடத்திற்கு மாற்ற வேண்டும் என்று தமிழக முதலமைச்சரைக் கேட்டுக்கொள்கிறேன்" என்றும் நயினார் நாகேந்திரன் தெரிவித்தார்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161